1972 ஆகஸ்ட் 21]

கௌரவ டாக்டர்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கௌரவ டாக்டர்களை (Honorary Surgeons) நீக்கிவிடும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது நீக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : பரிசீலனையில் இருக்கிறது.

Purchase of Modern Medicines

* 137 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether instructions have been sent to Siddha Dispensaries and Dispensaries of Indigenous Medicine under the control of Local Bodies prohibiting the purchase of modern medicines in such institutions?

ஆங்கில மருந்துகளை வாங்குதல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சித்த, இந்திய மருத்துவ முறை மருத்துவ மனைகள் ஆங்கில மருந்துகளை வாங்கக் கூடாதென்று தடை விதித்து அந்த மருத்துவ மனைகளுக்கு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு உள்ளூராட்சி மன்றங்கள், கோயில்கள் முதலியவற்றால் நடத்தப்படும் இந்திய மருத்துவ முறை மருத்துவ மனைகளில் பொறுப்பேற்றுள்ள மருத்துவ அதிகாரிகள் தேவையான சித்த மருந்தோ, ஆயூர்வேத மருந்தோ அல்லது யூனானி மருந்தோ அதை மட்டுமே வாங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனினும், அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள இந்திய மருத்துவ மனைகளில் வாங்கும் மொத்த மருந்தில்

முதல் உதவி செய்வதற்காக 5 சதவீதம் ஆங்கில மருந்து வாங்க அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, is the Hon. Minister aware of the fact that in some of the dispensaries, bandages, lints, tincture or benzoin and disinfectants are also considered as allopathic medicines and some of these doctors have been refused permission to buy these simple and essential articles?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட மருத்துவ மனைகளின் தேவைகள் தனித்தனியாகத்தான் பரிசீலிக்கப்படும். பொதுத் தேவைகளைப் பற்றிப் பரிசீலிக்கும் போது சில இடங்களில் சில நேரங்களிலே அவைகள் கிடைக்காமல் போகக்கூடும். எனவே தனித்தனியாகத் தேவைகளைத் தெரிவித்தால் தான், அவற்றைப் பரிசீலிக்க முடியும்.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether this ban will be removed at least for some articles which, I have pointed out, may not be available under the indigenous system of medicines? Will the Government consider the desirability of modifying the ban order to permit the doctors of these indigenous dispensaries to purchase these simple medicines?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு விவரமாகக் கேட்கும் காரணத் தினால் நானும் சற்று விவரமாகவே பதிலளிக்க விரும்புகிறேன்.

இப்போது நூற்றுக்கு ஐந்து விழுக்காடு என்ற அளவிற்குத் தொகை செலவிட்டு இந்தத் தேவைகளை வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கும்போது, இந்த விழுக்காட்டிற்கு மேலே அதை விரிவாக்கும்போது, அவர்கள் இன்னும் வேறு சிலபல அலோபதி மருந்துகளை வாங்கிவிடும் நிலைமை ஏற்படுகிறது. அப்படி அவர்கள் வாங்கிப் பயன்படுத்தினால், சித்த மருத்துவத்திற்கும் ஆயுர் வேத மருத்துவத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் செய்வதாகாது. மேலும் நோயாளிகள் எந்த மருத்துவர்களிடம் செல்லுவது நல்லது என்று யோசிக்கும் இக்கால நிலையில், இவர்கள் “அலோபதி” மருந்துகளை அதிகமாகப் பயன்படுத்தும் நிலை ஏற் பட்டால் மக்களுக்குத்தான் அதனால் குழப்பம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.